## திறன் மேம்பாட்டுச் செயலரங்கம்

## மெல்லக் கற்போருக்கான கற்பித்தல் உத்திகள்

தமிழ்த்துறை சார்பாக 3.9.2022(சனிக்கிழமை) அன்று மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான கற்பித்தல் உத்திகள் என்னும் தலைப்பில் திறன் மேம்பாட்டுச் செயலரங்கம் நடத்தப்பட்டது. அச்செயலரங்கில் தமிழ்த்துறைத் தலைவி திருமதி.சி.இராஜாத்தி அவர்கள், வகுப்பறையில் கையாளும் மெல்லக் கற்போருக்கான கற்பித்தல் உத்திகள் குறித்து விளக்கம் அளித்தார். காட்சிவழிக் கற்பித்தல்,சந்த நயத்தோடு கற்பித்தல்,மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் செயல்பாடுகளின் மூலம் கற்பித்தல் எனக் கற்பித்தல் உத்திகளுக்கான வழிகள் குறித்து விளக்கினார்.

தமிழ்த்துறை ஆசிரியரான திருமதி.மு.உமா ஈஸ்வரி அவர்கள் மெல்லக் கற்போரை அணுகும் முறைகள் குறித்தும் அம்மாணவர்களை தனிக்கவனம் கொண்டு நோக்க வேண்டிய அவசியம் குறித்தும் எளிமையாக இலக்கணம் கற்பிக்கும் உத்தி குறித்தும் தனது கருத்துகளைப் பகிர்ந்தார்.

தமிழ்த்துறை ஆசிரியை திருமதி.யோகேஸ்வரி அவர்கள் தமிழின் சிறப்பினைக்கூறும் பாடலைப் பாட,அவருடன் தமிழ்த்துறை ஆசிரியர்களான திருமதி.சுஜாதா,திருமதி.கமலா, திருமதி.திலகம், திருமதி.லாவன்யா, திருமதி.புனிதா ஆகியோரும் இணைந்து பாடினர்.